

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், நிறைவு நாளான இன்று (02.03.2017) பயிற்சி பெற்ற அனைத்து கிராம நிர்வாக அலுவலர்களுக்கும் பயிற்சி வருகைச்சான்றுகளை மாவட்ட வருவாய் கூட்டரங்கில் நடந்த நிகழ்ச்சியில் வழங்கினார்.
மாவட்ட வருவாய் அலுவலர் திரு. இளங்கோ, நிலஅளவை பதிவேடுகள்துறை உதவி இயக்குநர் திரு. சையது முகமது ஆகியோர் உடனுள்ளனர்.

# பத்திரிக்கை செய்தி

கன்னியாகுமரி மாவட்டத்தில், தமிழ்நாடு தேர்வாணையம் மற்றும் கருணை அடிப்படையில் காலியாக உள்ள கிராம நிர்வாக அலுவலர் பதவிகள் நிரப்பப்பட்டு, பணிபுரிந்து வருகிறார்கள். அவர்கள் அனைவருக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலும், புலத்திலும், இரு அணிகளாக 75 நபர்களுக்கு நிலஅளவை பயிற்சி 01.02.2017 முதல் 02.03.2017 வரை மாவட்ட நிலஅளவை பயிற்றுநர்களால் நிலஅளவைப் பயிற்சி வழங்கப்பட்டது.

நிறைவு நாளான இன்று (02.03.2017) பயிற்சி பெற்ற அனைத்து கிராம நிர்வாக அலுவலர்களுக்கும் பயிற்சி வருகைச்சான்றுகளை மாவட்ட வருவாய் கூட்டரங்கில் வைத்து, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், வழங்கினார்.

விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. இளங்கோ, நிலஅளவை பதிவேடுகள்துறை உதவி இயக்குநர் திரு. சையது முகமது, தொழில் நுட்ப மேலாளர் திரு. கனகராஜப்பன், ஆய்வாளர் திரு. சங்கரபாண்டியன், துணை ஆய்வாளர் திரு. மணிகண்டன், தலைமை வரைவாளர்கள் திரு. இராமச்சந்திரன், திரு. பாலசுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.